1979 நவம்பர் 8]

31–8–1979 ஆம் தேதியிடப்பெற்ற 2172 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம்ஆண்டு திரைப்படச் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

195. தற்காலிகத் திரையரங்குகளுக்கு குறிப்பிட்ட மூன்றாண்டுகள் முடிந்த பின்னர் அதே இடத்தில் மீண்டும் உரிமம் வழங்குவது குறித்து தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்) 13–9–1979 ஆம் தேதியிடப்பெற்ற 2308 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

196. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் சர்சார்ஜ் டிஸ்அலவன்ஸ் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 9–7–1979 ஆம் தேதியிடப்பெற்ற 1047 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

197. செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவேற்காடு நகரியத்தை அமைப்பது குறித்த ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 27–6–1979 ஆம் தேதியிடப்பெற்ற 991 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) வது பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

* 50. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91. அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1979).

* 51. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979).

6-11-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பபெற்றது.

[1979 நவம்பர் 8

* 52. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979).

* 53. 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979).

* 54. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1979).

* 6-11-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
21 JUN 1980
MADRAS-600 009